பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 21

செவ்வாய்க்கிழமை
17 டிசெம்பர் 2024

மார்கழி 02 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

## புதிய சபாநாயகர் இன்று தெரிவு

புதுடெல்லி, டிசெ. 17
இலங்கை நாடாளுமன்றத்தின் புதிய சபாநாயகர் தெரிவு இன்று இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்
11

# தமிழர்களின் விருப்பத்தை அநுர அரசு நிறைவேற்றும்!

## இந்தியப் பிரதமர் மோடி நம்பிக்கை

## டிஜிற்றல், எரிசக்தியில் ஒத்துழைப்பு

## மின்சார உற்பத்திக்கு திரவ எரிவாயு



**புதுடெல்லி, டிசெம்பர் 17**

**இலங்கையில் உள்ள தமிழ்ச் சமூகத்தின் விருப்பங்களை ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நிறைவேற்றும் என்று இந்தியப் பிரதமர் மோடி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.**
11

# பொருளாதாரப் புதைகுழி; மீட்டது இந்தியாதான்!

## ஜனாதிபதி அநுர நன்றி தெரிவிப்பு உறவுகள் தொடரும் என்றும் உறுதி

புதுடெல்லி, டிசெ. 17
இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வரலாறு காணாத பொருளாதார நெருக்கடியை நாங்கள் சந்தித்தோம். அந்தப் புதைகுழியில் இருந்து வெளிவர இந்தியா எங்களுக்குப் பெரிதும் உதவியது. இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கையில் இலங்கை மிக முக்கியமான
11

இந்தியாவுக்கு எதிராக

## இலங்கையை எவரும் பயன்படுத்தவிடேன்!

ஜனாதிபதி அநுர நேற்றுத் திட்டவட்டம்
இலங்கைக்கு வருமாறு மோடிக்கு அழைப்பு
11

## இராமேஸ்வரம் தலைமன்னார் இடையே படகுச்சேவை
11

## இழுவைமடிப் படகுகள் மூலம் இந்திய மீனவர்கள் அத்துமீறல்

பிரதமர் மோடியிடம் அநுர தெரிவிப்பு
இணக்கமாகத் தீர்க்கவும் தீர்மானம்

புதுடெல்லி, டிசெ. 17
இந்திய இழுவைமடிப் படகுகள் இலங்கையின் கடற்பரப்புக்குள் தொடர்ச்சியாக அத்துமீறி மீன்பிடியில்
11



முச்சந்தி முரளி

'மோடி மந்திரம் திசைகாட்டியிடம் பலிக்குமோ எண்டு பாப்பம்'

## முன்னாள் ஜனாதிபதி ரணில் ஞாயிறன்று இந்தியா பயணம்

புதுடெல்லி, டிசெ. 17
முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 22ஆம் திகதி இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார்.
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டு, உயர்மட்டக் கலந்துரை
11




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிளாஸ்ரிக் பாவனை குறைப்பு விழிப்புணர்வுச் சிரமதானம்



மன்னார் கீரிக் கடற்கரையில் பிளாஸ்ரிக் பாவனைக் குறைப்பு தொடர்பான விழிப்புணர்வு சிரமதானம் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் மாவட்ட இணைப்பாளர் பெனடிக் குரூஸின் ஏற்பாட்டில் திட்ட செயற்பாட்டாளர் பிரியந்தா தலைமையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் இளைஞர் குழுவினர் குறித்த சிரமதானப் பணியில் ஈடுபட்டதுடன், மாவட்டமட்டக் கலந்துரையாடலும் இடம்பெற்றது. (எ-ரி-56)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், டிசெ.17

நீர்வேலி அருள்மிகு கந்த சுவாமி தேவஸ்தானம் நடத்தும் வாராந்தச் சுக்கிர வாரக் கந்தபுராண படனத் தொடர்-6 சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

ஆலயத்தின் பிரதம குருக்கள் ஸ்கந்தகுரு ஞான பானு, சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையைத்தொடர்ந்து தலைமையுரையை பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதன் ஆற்றுவார். சைவப்புலவர், பிரசங்க பூஷணம் பொன். சந்திர வேல் 'தவங்காண்படலம்' எனும் விடயப்பொருளில் சொற்பொழிவாற்றுவார். அதிலிருந்து நீர்வைக் கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-45)

# புதிய சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன

**கொழும்பு, டிசெ.17**

**10ஆவது நாடாளுமன்றத்தின் புதிய சபாநாயகராக மருத்துவர் ஜகத் விக்கிரமரத்னவை முன்மொழிவதற்கு ஆளுங்கட்சியான தேசிய மக்கள் சக்தி திட்டமிட்டுள்ளது.**

பொதுத்தேர்தலில் பொலன்னறுவை மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்ட இவர், 51 ஆயிரத்து 391 வாக்குகளைப் பெற்று விருப்பு வாக்குப் பட்டியலில் இரண்டாம் இடத்தைப் பிடித்திருந்தார்.

சபாநாயராக பதவி வகித்த அசோக ரன்வல அவரது கல்வித் தகைமை தொடர்பில் எழுந்த சர்ச்சையை அடுத்து பதவி விலகினார். அவரது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதியும் ஏற்றுக்கொண்டார். அதையடுத்து நாடாளுமன்றம் இன்று கூடும்போது முதல் நடவடிக்கையாக சபாநாயகர் தேர்வு இடம்பெறும். அதில் ஆளுங்கட்சி சார்பில் ஜகத் விக்கிரமரத்னவின் பெயரை முன்மொழிவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்திக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் இருப்பதால் எதிரணி வேட்பாளர் ஒருவரை நிறுத்தினால்கூட ஆளுங்கட்சி தரப்பே வெற்றிபெறும். அதனால் இலங்கையின் 23 ஆவது சபாநாயகராக ஜகத் விக்கிரமரத்ன தெரிவுசெய்யப்படவுள்ளார். (எ-44)

## ஹர்ஷனவுக்கு 'டாக்டர்'; விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு,டிசெ.17

நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவின் பெயருக்கு முன்னால் டாக்டர் பட்டம் இடம்பெற்றமை தொடர்பில் நாடாளுமன்ற உத்தியோகத்தர்களிடம் விசாரணை நடத்தப்படவுள்ளது.

நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார சட்டத்தரணியாக இருப்பினும் நாடாளுமன்றப் பதிவேட்டிலும், இணையத்தளத்திலும் அவரது பெயருக்கு முன்னால் டாக்டர் பட்டம் உள்ளது. இது நாடாளுமன்ற உத்தியோகத்தர்களின் தவறாலேயே நடந்துள்ளது என்று நாடாளுமன்றத் தகவல் பிரிவு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் விளக்கம் கோரப்படவுள்ளது. (எ-33-6)

## பட்டத்தை முகநூலில் பதிவிட்ட பிரதி சபாநாயகர்



கொழும்பு,டிசெ.17

சபாநாயகரின் கலாநிதிப்பட்டம் கேள்விக்குள்ளாக்கப்பட்டு சபாநாயகர் பதவி விலகியுள்ள நிலையில், பிரதி சபாநாயகர் றிஸ்வி சாலி தனது பட்டத்தை முகநூலில் பதிவிட்டுள்ளார்.

பாகிஸ்தானின் நிஸ்தார் மருத்துவக் கல்லூரியில் 1986 ஆம் ஆண்டு மருத்துவக் கலாநிதிப் பட்டத்தையும், கொழும்புப் பல்கலைக்கழகத்தில் தொண்டை, காது மருத்துவத்தில் டிப்ளோமாப் பட்டத்தையும் பெற்றுள்ளேன் என்றும், இலங்கை மருத்துவசபையில் பதிவு செய்து 38 வருடங்களாக மருத்துவராகப் பணியாற்றுகின்றேன் என்றும் அவர் முகநூலில் பதிவிட்டுள்ளார். (எ-33-6)

## றிஸ்வி சாலியின் பதவியை பறிக்கத் திட்டமிடும் ஐ.ம.ச.

கொழும்பு, டிசெ.17

பிரதி சபாநாயகர் றிஸ்வி சாலியும் தனது பதவியை இராஜினாமா செய்யவேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

தனது தொழில் தகைமை தொடர்பில் போலியான தகவல்களை வழங்கியுள்ளார் என்ற குற்றச்சாட்டு தொடர்பிலேயே அவர் பதவி விலகவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார நேற்று தெரிவித்தார்.

தான் விசேட மருத்துவ நிபுணர் எனக் கூறிய பிரதி சபாநாயகருக்கு எதிராக இலங்கை மருத்துவசபையிலும் முறைப்பாடு செய்யப்படும் எனவும் அவர் கூறினார்.

ஏனைய சில நிறுவனங்களிடம் முறையிடுவது தொடர்பிலும் பரிசீலிக்கப்பட்டுவருகின்றது.

அவர் அவ்வாறு பதவி விலகாவிட்டால் நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்படும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார். (எ-இ)

## சபாநாயகர் பதவிக்கு பட்டம் தேவையில்லை

*முன்னாள் சபாநாயகர் சமல் தெரிவிப்பு*

கொழும்பு, டிசெ.17

நாடாளுமன்றத்தில் சபாநாயகர் பதவியை வகிப்பதற்கு கலாநிதிப் பட்டம் தேவையில்லை. எனினும், தற்போதைய சபாநாயகர் பதவி விலகியுள்ளார். அதை நாம் மதிக்கவேண்டும் என்று முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

சாதாரண நபராக இருந்தாலும் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவான பின்னர், சபையில் ஆதரவு இருந்தால் சபாநாயகர் ஆகலாம். அதற்கு கலாநிதிப் பட்டம் அவசியமில்லை. சபாநாயகர் பதவியை வகித்த அசோக ரன்வல நாடாளு மன்றத்துக்கு தகவல் வழங்கும்போது பிழை நடந்திருக்கலாம். அது பற்றி எமக்கு கூற முடியாது. ஆனாலும் அவர் பதவி விலகியுள்ளார். அதை நாம் மதிக்கவேண்டும். அரசாங்கங்கள் ஆட்சிக்கு வரும்போது சவால்கள் வரக்கூடும். அவற்றை எதிர்கொண்டு தீர்வுகளை வழங்குவதே சிறந்தது-என்றார். (எ-44)

## எந்த வழியில் அநுர அரசு? விளக்கம் கேட்கிறார் நாமல்

கொழும்பு, டிசெ.17

கடன் மறுசீரமைப்பில் ரணில் விக்கிரமசிங்க பின்பற்றிய வழியா அல்லது தமது வழியா என்பதை அநுர அரசாங்கம் நாடாளுமன்றத்துக்குத் தெளிவுபடுத்தவேண்டும் என்று மொட்டுக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில் நாமல் ராஜபக்சவை அரவணைத்துக்கொண்டு தொங்கு பாலத்தில் பயணிக்கின்றார் எனக் கூறினர். ஆனால் அவர் என்னை அரவணைத்துக்கொண்டு பயணித்தாரா அல்லது அநுரவை அரவணைத்துக் கொண்டு சென்றாரா என்ற கேள்வி தற்போது எழுகின்றது.

கடன் மறுசீரமைப்புத் தொடர்பில் தனது உறுதியான நிலைப்பாட்டை தற்போதைய அரசாங்கம் நாடாளுமன்றத்துக்கு தெளிவுபடுத்தவேண்டும். ரணில் விக்கிரமசிங்க இணங்கிய விடயங்களுக்கு தற்போதைய அரசாங்கமும் இணங்கியுள்ளதா அல்லது தேர்தல் காலத்தில் கூறப்பட்டதுபோல் திருத்தங்களைச் செய்து தேசிய மக்கள் சக்தியின் யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளனவா என்பது பற்றித் தெளிவுபடுத்தவேண்டும். அதற்கு சர்வதேச நாணயநிதியம் உள்ளிட்ட தரப்புகள் இணங்கியுள்ளனவா என்பது பற்றியும் அறிவிக்கவேண்டும்-என்றார். (எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூசு தட்டப்படுகின்றது பண்டோரா பேப்பர்ஸ்

## இன்ரபோலை நாடுகின்றது சி.ஐ.டி.

**கொழும்பு, டிசெ.17**
**பண்டோரா பேப்பர்ஸ் தகவல் வெளிப்படுத்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ள இலங்கையர் குழுவின் சொத்துகள் தொடர்பில் விசாரணை நடத்த சர்வதேச பொலிஸாரின் உதவி நாடப்படவுள்ளது என்று குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.**

தேவையான ஆவணங்களை விரைவில் கொண்டு வருவதற்கு குற்றப் புலனாய்வுத் திணைக்களம் ஏற்கனவே பேச்சு நடத்தி வருகின்றது என்று குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் இமேஷா முத்துமாலை தெரிவித்துள்ளார். கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பண்டோரா அறிக்கையில் பல இலங்கை அரசியல்வாதிகள் மற்றும் வர்த்தகர்களின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. அந்த அறிக்கையில் உள்ள அனைத்துத் தகவல்களும் பெறப்பட்டு உரிய முறையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் என குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உலகம் முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய பண்டோரா பேப்பர்ஸ் 2021ஆம் ஆண்டு வெளியாகியிருந்தது. சட்டவிரோதமாக சொத்துக் குவித்திருந்த அரசியல் தலைவர்கள், திரைப் பிரபலங்கள், விளையாட்டு வீரர்கள் மற்றும் தொழிலதிபர்கள் எனப் பல தரப்பட்ட பிரபலங்களின் விவரங்கள் அதில் குறிப்பிடப்பட்டிருந்தன.

இந்த ஆவணத்தை சர்வதேச புலனாய்வு பத்திரிகையாளர்கள் கூட்டமைப்பு வெளியிட்டிருந்தது. 117 நாடுகளிலிருந்து, 150க்கும் மேற்பட்ட செய்தி நிறுவனங்களின் பத்திரிகையாளர்கள் இந்தப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இலங்கையின் முன்னாள் பிரதி அமைச்சர் நிருபமா ராஜபக்சவின் கணவர் திருக்குமார் நடேசனின் பெயரும் அந்தப் பட்டியலில் இடம் பெற்றிருந்த நிலையில், கொழும்பு அரசியலில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. (எ-இ)

## ரயில் இயந்திரங்கள் விபத்து

கொழும்பு, டிசெ.17
ரஜரட்ட ரெஜின மற்றும் சாகரிகா ரயில்களின் இயந்திரங்கள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளான சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பெலியத்தையிலிருந்து அநுராதபுரம் நோக்கிப் பயணித்த ரஜரட்ட ரெஜின ரயில் இயந்திரத்தின் இயக்கத் திசையை மாற்றும்போது, அது தவறான பாதையில் பயணித்து சாகரிகா ரயிலுடன் மோதியது என்று தெரிவிக்கப்படுகின்றது. விபத்தில் சாகரிகா ரயில் இயந்திரம் பலத்த சேதமடைந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பில் 3 பணியாளர்கள் இடைநிறுத்தப்பட்டுள்ள நிலையில், சம்பவம் தொடர்பான விசாரணைகள் ரயில் திணைக்களத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (எ-45)

## வரிநிலுவை செலுத்த 26வரை காலக்கெடு!

கொழும்பு, டிசெ.17
2023, 2024 மதிப்பீட்டு வருடத்தின் வரி நிலுவையை எதிர்வரும் 26ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தவேண்டும் என்று உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அறிவித்துள்ளது. இந்தத் திகதிக்கு முன்னர் வரி நிலுவையைச் செலுத்தத் தவறும் நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு எந்த நிவாரணமும் வழங்கப்படாது என திணைக்களத்தின் ஆணையாளர் சேபாலிகா சந்திரசேகர தெரிவித்துள்ளார். (எ-இ)

## திருடர்களைக் கைதுசெய்ய உதவிகோரும் பொலிஸார்

யாழ்ப்பாணம், டிசெ.17
யாழ்ப்பாணம், தெல்லிப்பழை, சுன்னாகம் ஆகிய இடங்களில் உள்ள பல்பொருள் அங்காடிகளில் திருட்டுச் சம்பவங்களில் ஈடுபடுவோர் தொடர்பான விவரங்கள் தெரிந்தால் அறிவிக்குமாறு பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சுன்னாகம் பகுதியில் உள்ள பல்பொருள் அங்காடி ஒன்றில் பெண் ஒருவர் சூட்சுமமான முறையில் பொருள்களைத் திருடுவது அங்குள்ள பாதுகாப்புக் கமராவில் பதிவாகியுள்ளது. முச்சக்கர வண்டியில் வரும் இவர்கள் பல்பொருள் அங்காடியில் பொருள்களைத் திருடி ஆடைகளுக்குள் மறைத்துச் செல்கின்றனர் என்று கூறப்படுகின்றது.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-இ)

## இலங்கையரை நாடு கடத்தும் இஸ்ரேல்

கொழும்பு, டிசெ.17
பணி ஒப்பந்தத்தை மீறிய குற்றச்சாட்டில் இஸ்ரேலில் இருந்து 17 இலங்கையர்கள் நாடு கடத்தப்படவுள்ளனர் என்று இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார். விவசாயப் பணிகளுக்கான விசாவில் இஸ்ரேல் சென்றுள்ள இவர்கள், வெதுப்பகம் ஒன்றில் பணியாற்றியபோது அந்நாட்டுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (எ-இ)

## துப்பாக்கிச் சூட்டில் இருவர் காயம்

கொழும்பு, டிசெ.17
மீட்டியகொட மஹவத்த பகுதியில் நேற்றுமுன்தினம் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இருவர் காயமடைந்துள்ளனர். (எ-இ)




காலம் பொன்னானது. அதிலையும் இந்த எலிக்காய்ச்சல் காலத்தில எவ்வளவு வேளைக்கு ஆஸ்பத்திரிக்குப் போக ஏலுமோ அவ்வளவு வேளைக்கு போறதுதான் எல்லாருக்கும் நல்லது. எலிக்காய்ச்சலில செத்த எட்டுப்பேருமே காய்ச்சல் வந்து, ஏழெட்டு நாளைக்குப் பிறகு ஆஸ்பத்திரியில அட்மிட் ஆனதாலதான் அவையைக் காப்பாத்த ஏலாமப் போனதெண்டு டாக்குத்தர்மார் சொல்லுகினம். அதாலதான் 'ஒருநாள் காய்ச்சலெண்டாலும் உடன் கொண்டுபோய் பக்கத்தில இருக்கிற ஆஸ்பத்திரியில காட்டி சோதிச்சு மருந்தெடுங்கோ' எண்டு சுகாதாரத்துறைக்காரர் கிளிப் பிள்ளை மாதிரி திரும்பத்திரும்பச் சொல்லிக்கொண்டிருக்கினம். ஆனால் எட்டுப்பேர் எலிக்காய்ச்சலால செத்தபிறகும், எங்கட ஆக்களுக்கு காய்ச்சல் வந்த உடன ஆஸ்பத்திரிக்குப் போக வேணுமெண்ட அறிவு வரேலை. 'எனக்கெங்க எலிக்காய்ச்சல் வரப்போகுது. இது சும்மா சளிக்காய்ச்சல் தான்' எண்ட நினைப்பில பனடோலைப் போட்டு மாத்தலாமெண்டு நினைக்கினம். நாலைஞ்சு நாளாகியும் காய்ச்சல் விடாட்டிக்குத் தான் ஆஸ்பத்திரிக்குப் போகினம். அதுக்குள்ள கிருமி எல்லா இடமும் பரவி, மாத்தமுடியாத கட்டத்துக்குப் போடும். பிறகு 'எப்பிடியாவது காப்பாத்துங்கோ' எண்டு டாக்குத்தர்மாரைக் கெஞ்சினாலும், அவையாலையும் ஒண்டும் செய்யேலாத கட்டத்துக்கு காய்ச்சல் போடும்.

இப்பிடி சுகாதாரத்துறை உடனவந்து காய்ச்சலைக் காட்டுங்கோ எண்டு படிச்சுப் படிச்சுச் சொன்னாலும் அது கனபேரின்ர காதில ஏறுறேலை. இதில படிச்சவை, படிக்காதவை, பாமரர், அதிகாரிமார் எண்ட வித்தியாசமே இல்லை. படிப்புக்குறைஞ்ச ஆக்களை விடவும், படிச்ச பெரும் உத்தியோகங்களில இருக்கிறவைதான் உந்தக் காய்ச்சலில கவலையீனமா இருக்கினம். உதாரணத்துக்கு ஒரு சம்பவம். யாழ்ப்பாணத்தில உள்ள விரல் விட்டு எண்ணக்கூடிய நேர்மையான, சனத்துக்காக கஷ்டப்பட்டு வேலை செய்யிற ஒரு அதிகாரிக்கு நாலைஞ்சு நாளாக் காய்ச்சல். ஆனால் அவருக்கோ வெள்ள நிவாரணம், வருசக் கடைசிக்குள்ள முடிச்சுக்குடுக்க வேண்டிய திட்டங்கள் எண்டு மலைமாதிரி வேலையள் இருந்திருக்கு. வேலையைச் செய்யிறதா? காய்ச்சலைப் பாக்கிறதா? எண்ட குழப்பத்தில அவருக்கு முதல் வேலையை முடிக்கிறதுதான் முக்கியமாப் பட்டிருக்கு. அதால காய்ச்சலைக் காட்டாமல் வேலையில மூழ்கிட்டார். இப்ப அஞ்சு நாளாகியும் காய்ச்சல் விடேலை எண்டவுடனதான் ஆஸ்பத்திரிக்குப் போய் அட்மிட் ஆனவராம். நல்லவேளை அவருக்கு எலிக்காய்ச்சல் இல்லை எண்டு பரிசோதனை முடிவில வந்திட்டாம், காய்ச்சலும் குறைஞ்சிட்டுதாம். ஒருவேளை அவருக்கு வந்தது எலிக்காய்ச்சலா இருந்திருந்தால் ....?

எலிக்காய்ச்சல் ஆருக்கு வரும் எண்டு சொல்லிக்கொண்டு வாறேலை. ஏதோ ஒரு வகையில அந்தக்காய்ச்சலுக்கான கிருமிஎளைத்தொத்தியிருக்கும். ஆக்களோட வீரம் காட்டுற மாதிரி காய்ச்சலோட காட்டேலாது. இதை விளங்கிக் கொண்டு, காய்ச்சல் வந்தால் உடன கொண்டு போய்க் காட்டினால் வீணான உயிரிழப்பைத் தடுக்கலாமெல்லோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

மண்ணில் 30 . 04 . 1950

விண்ணில் 15 . 12 . 2024



## பொன்னுத்துரை சண்முகநாதன் (பிள்ளையார் ஐயா)

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், மூத்தவிநாயகர் கோவிலடி, ஆனைக்கோட்டை மற்றும் கம்மாலை வீதி, சண்டிலிப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை சண்முகநாதன் அவர்கள் நேற்றுமுன்தினம் (15.12.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - தங்கம்மா தம்பதியரின் மூத்தபுதல்வனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - ஆச்சிமுத்து தம்பதியரின் மருமகனும், புஸ்பராணி (சறோ) அவர்களின் அன்புக் கணவரும், மாலினி, மயூரன் (RDHS- Office - Jaffna), மதியழகன், மகிஜா (France) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜீவிதன், சந்திரரஜனி (DGH - Kilinochchi), யாழினி, சுதாகரன் (France) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், றிசானா, விதுசனா, றுசாந்தன், டஸ்மிதா, டனுத்ரா, நிவேத்திரா, ஜோதினி, பிரவீன், நகிர்ஜன், வர்சா, இனிசா ஆகியோரின் பேரனும், பத்மநாதன் (குட்டி), காலஞ்சென்ற இராமநாதன் (பவுன்) மற்றும் ஜெகநாதன் (கிளி), காலஞ்சென்ற திலகநாதன் (ராசா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பரமேஸ்வரி, யோகமலர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.12.2024) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கம்மாலை வீதி,
சண்டிலிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்
077 415 3384

(CS/56940) J-1

# மீனவர்கள் சந்தித்துப் பேசினால் பல பிரச்சினைகள் தீர்க்கப்படும்

## இந்தியத் துணைத் தூதுவர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, டிசெ.17

மீனவர்களை நேரில் சந்திப்பது இதுவரை நடைபெறவில்லை. அது நடக்குமாயின் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும் என யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கை ஜனாதிபதி இந்தியா பயணிக்கின்றார். அங்கு தங்கியிருந்து இலங்கை சம்பந்தமான பல திட்டங்கள் தொடர்பான அறிவிப்பை எதிர்பார்க்கலாம். வடக்கு,கிழக்கு மாகாணங்கள் சேர்ந்த பல திட்டங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. கடந்த ஒக்ரோபர் மாத இறுதியில் பெரியளவிலான கூட்டம் ஒன்று நடைபெற்றது. அதில் இலங்கை தொடர்பான அதிகாரிகள் சந்தித்திருக்கிறார்கள். ஆனால் மீனவர்கள் நேரில் சந்திப்பது இதுவரை நடைபெறவில்லை. அது இடம்பெறுமாயின் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும்- என்றார். (எ-இ)

# திடீர் சுகவீனமுற்று குடும்பப்பெண் பலி!

## மாதிரிகள் கொழும்புக்கு

யாழ்ப்பாணம், டிசெ. 17

யாழ்ப்பாணம் - தெல்லிப்பழைப் பகுதியைச் சேர்ந்த குடும்பப் பெண் ஒருவர் திடீர் சுகவீனமுற்று உயிரிழந்துள்ளார்.

செல்வரூபன் அருள்வாணி (வயது-44) என்ற குடும்பப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த பெண் சுகவீனமுற்ற நிலையில், நேற்றுமுன்தினம் அளவெட்டி மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெற்றுவிட்டு வீட்டுக்குத் திரும்பியுள்ளார். எனினும், அவரின் உடல்நிலை மோசமாகி மயக்கமடைந்துள்ளார். இதையடுத்து, அவர் தெல்லிப்பழை மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்ட நிலையில், உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். இறப்புக்கான காரணம் தெரியவராத நிலையில் உடற்கூற்று மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன. (ம-26)



# மெயோட்டியில் புயல் கோரம் ஆயிரம் பேர்வரை உயிரிழப்பு

பரிஸ், டிசெ. 17

இந்துமா சமுத்திரத்தில் உள்ள பிரெஞ்சுத் தீவான மெயோட்டியில் புயலின் தாக்கம் காரணமாக, ஆயிரம் பேர்வரை உயிரிழந்துள்ளனர் என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த ஒரு நூற்றாண்டில் இதுபோன்றதொரு புயல் பிரான்ஸிலும், பிரான்ஸின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளிலும் பதிவாகவில்லை. மணிக்கு 280 கிலோமீற்றர் வேகத்தில் வீசிய புயல் காற்றால் மெயோட்டி முற்றாகச் சீர்குலைந்துள்ளது என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குறைந்தது ஆயிரம் பேர்வரையாவது இந்தப் பேரிடரால் உயிரிழந்திருக்கலாம் என்பது முதற்கட்டத் தகவலாகவே அமைந்துள்ளது. மீட்புப் பணிகள் தொடர்ந்து வருகின்றன. சடலங்கள் பல இடங்களில் இருந்தும் குவியல் குவியலாக மீட்கப்பட்டு வருகின்றன என்று அதிகாரிகள் அறிக்கையிட்டுள்ளனர். 3 இலட்சம் மக்கள் வாழும் மெயோட்டி தீவு, பிரான்ஸின் ஏழ்மையான பகுதிகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது. எதிர்வரும் சில நாள்களுக்குக் காலநிலை மோசமாக இருக்கும் என்று எச்சரிக்கப்பட்டுள்ள நிலையில், மீட்புப் பணிகள் தடங்கலை எதிர்கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-இ)

# பேருந்து மோதி முதியவர் சாவு

யாழ்ப்பாணம், டிசெ. 17

யாழ்ப்பாணம் - இளவாலையில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மோ.பாக்கியநாதன் (வயது-76) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

பற்றிமா தேவாலயத்துக்கு அருகிலேயே இந்த விபத்து சம்பவித்துள்ளது என்றும், வீதியில் நின்ற தந்தை, மகன் மீதே பேருந்து மோதியுள்ளதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

காயமடைந்த இருவரும் தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட போதிலும், சிகிச்சையின்போது தந்தை (மோ. பாக்கியநாதன்) உயிரிழந்துள்ளார். மகன் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றார்.

விபத்துத் தொடர்பான விசாரணைகளை இளவாலைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். இறப்பு விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-26)

# தலைமன்னாரில் சிறுமி கொலை தடுப்பிலிருந்து தப்பியவர் கைது

மன்னார், டிசெ. 17

தலைமன்னார் ஊர்மனை கிராமத்தில் கடந்த பெப்ரவரி மாதம் 10 வயதுச் சிறுமி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர், தடுப்பியிருந்து தப்பிச் சென்ற நிலையில் அவர் ஆறு மாதங்களுக்குப் பின்னர் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் நேற்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, சந்தேகநபரை எதிர்வரும் 26ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

தலைமன்னார் ஊர்மனை கிராமத்தில் கடந்த பெப்பிரவரி மாதம் 15ஆம் திகதி மாலை காணாமற்போன 10 வயதுச் சிறுமி தனது அம்மம்மாவின் வீட்டில் இருந்து சுமார் 300 மீற்றர் தூரத்தில் உள்ள தென்னந்தோப்பில் இருந்து சடலமாக மீட்கப்பட்டிருந்தார். அவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுக் கழுத்து நெரித்துக் கொல்லப்பட்டமை உடற்கூற்றுப் பரிசோதனையில் உறுதியானது. இதையடுத்தே, அந்தத் தென்னந்தோட்டத்தில் காவலாளியாகப் பணியாற்றிய மேற்படிநபர் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-56)

# கொக்குளாய் பகுயில் ஒருவர் படுகொலை!

முல்லைத்தீவு, டிசெ. 17

கொக்குளாய் பகுதியில் குடும்பத் தலைவர் ஒருவர் நேற்றுமுன்தினம் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கண்டி, நுவரெலியா பகுதியில் இருந்து தொழில் நிமித்தம் வந்த இருவர் கொக்குளாய் பகுதியில் வாடியில் தங்கியிருந்துள்ளார்கள். இந்த நிலையிலேயே, ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார். அவருடன் தங்கியிருந்த மற்றையவர் சந்தேகத்தின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

சுயநலமின்மை, சுயநலம் என்பவற்றைத் தவிர, கடவுளுக்கும் சாத்தானுக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை.

– விவேகானந்தர் –

# பாரதத்தின் சமிக்ஞை

ஜனாதிபதி அநுரகுமாரவுக்கு மகத்தான வரவேற்பை வழங்கியிருக்கின்றது இந்தியா. இந்திய குடியரசுத் தலைவரான திரௌபதி முர்முவின் மாளிகையில் செங்கம்பளம் விரித்து 'பாரம்பரிய வரவேற்புடன் ' முதன்நிலை அதிகாரிகளின் பங்கெடுப்புடன் அநுரவை அரவணைத்திருக்கின்றது பாரதம். வரவேற்பு நிகழ்வின்போதும், அதன் பின்னரான 'சம்பிரதாயபூர்வ மாளிகை நடைபயணத்தின்போதும்' பிரதமர் மோடியும், குடியரசுத் தலைவர் முர்முவும் வெளிப்படுத்தியிருக்கும் உடல்மொழி மிகக் கனதியானது. அயல்நாட்டுக்கு முன்னுரிமை என்ற ஆளும் பாரதிய ஜனதாவின் வெளிவிவகாரக் கொள்கைக்கு 'அப்பாற்பட்ட' பல செய்திகளை பாரதம் நேற்றுப் பறைசாற்றியிருக்கின்றது என்பதே உண்மை.

ஜனாதிபதி அநுரவும், அவர் தலைமையிலான தேசிய மக்கள் சக்தியும் பிராந்தியத்துக்குப் புதிய அதிகாரக் கதிரைகள். காலாகாலமாக இலங்கையில் ஆதிக்கம் செலுத்திவந்த ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக் கட்சி மற்றும் சுதந்திரக் கட்சியின் வழிவந்த பெரமுன ஆகியவற்றை அணுகுவது இந்தியாவுக்கு மிக இலகுவாக இருந்திருக்கும். இன்னும் சொல்லப்போனால், இலங்கையில் மாறிமாறி அமைக்கப்பட்ட ஒவ்வொரு ஆட்சியும் இந்தியப் பிடிமானத்தின் ஏதோவொரு நீட்சியாகவே அமைந்திருந்தது. ஆனால், தேசிய மக்கள் சக்தியின் ஆட்சி அத்தகையது அல்ல. இங்கே, தொடக்கப் புள்ளியில் இருந்து அணுக வேண்டிய கட்டாயத்தனம் பாரதத்துக்கு உள்ளது. ஏனெனில், தேசிய மக்கள் சக்தியின் திட்டங்களும், கொள்கைகளும் கடந்த ஆட்சிகளின் நீட்சியல்ல. இதை இந்தியா வலுவாகவே உணர்ந்திருக்கின்றது. ஜனாதிபதி அநுரவுக்கான நேற்றைய வரவேற்பில் அதை உறுதிசெய்துமுள்ளது.

இதில் கவனிக்கக்கூடிய விடயம் என்னவென்றால், மாலைதீவு, பங்களாதேஷ் ஆகியவற்றுடனான விடயங்களையும் விவகாரங்களையும் அணுகும்போது, 'அயல்நாட்டுக்கு முன்னுரிமை' என்று அடிக்கொருமுறை உச்சரிக்கும் இந்தியத் தலைமைகள், நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற கலந்துரையாடலில் 'முன்னுரிமை' என்பதை 'நட்புறவு' என்பதாக மாற்றியுள்ளனர். குறிப்பாக, இந்தியாவின் கொள்கை வகுப்பாளர்களில் ஒருவரும், நிதி அமைச்சருமான நிர்மலா சீதாராமன், 'இலங்கையுடனான நட்புறவு என்றும் பேணப்படும் ஒன்று. அதை இனியும் பேணுவோம்' என்று அறிவித்திருக்கின்றார். இதன்மூலம் இலங்கையின் விடயத்தில் தனது பார்வையையும் போக்கையும் பாரதம் மாற்றிக்கொள்ள எத்தனிப்பதாகவே உணர முடிகின்றது.

'முன்னுரிமை' என்பது பொதுவான நலன்களின் பாற்பட்டது. ஆனால், 'நட்புறவு' என்பது யாவற்றுக்கும் அப்பாற்பட்டது. இலங்கைக்குள் அனைத்து வகைகளிலும் ஊடுருவுவதை சீனம் உறுதிப்படுத்தியுள்ள நிலையில் - ஏகப்பட்ட உதவிகளை வாரிக்குவிக்க அந்தநாடு தயாராகவுள்ள பின்னணியில், 'முன்னுரிமை', 'நட்புறவு' என்ற பிரகடனங்களில் மறைந்திருக்கும் ஆழத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டியது அவசியமும் தவிர்க்கப்பட முடியாததுமாகும். 'முன்னுரிமைகளுக்கு அப்பாற்பட்டது எம் உறவு' என்ற செய்தியைச் சொல்வதற்கு பாரதம் எத்தனிக்கின்றது. நேர்மையாகச் சொல்லவேண்டுமெனில், பாரதத்தின் நிலையோ பரிதாபத்துக்குரியதாக மாறியிருக்கின்றது. பிராந்திய வல்லரசு என்ற ஸ்தானத்தில் இருந்து -தான் தலையிட்ட தமிழர்களின் விவகாரங்களுக்கு நியாயத்தை நிலைநாட்டியிருந்தால், இன்று ஒன்றல்ல நூறு அநுரக்கள் வந்தாலும், தமிழர்களை மேவிய வகையில் சீனத்தின் தலையீடு இலங்கைக்குள் நுழைந்திருக்க வாய்ப்பு அறவே இல்லை. ஆனால், தமிழர்களுக்குப் போக்குக் காட்டிய இந்தியாவுக்கு, தேசிய மக்கள் சக்தி போக்குக் காட்டுவதெல்லாம், கர்மாவின் பாற்பட்டதுதான்.




உள்ளூராட்சிசபைத் தேர்தல்

## வேட்புமனு நிராகரிப்புக்கான சட்டத்திருத்தங்கள் விரைவில்

கொழும்பு, டிசெ.17

**உள்ளூராட்சிசபைத் தேர்தலின் வேட்புமனுக்களை நிராகரிப்பதற்கான புதிய சட்டத் திருத்தங்கள் எதிர்வரும் ஓரிரு வாரங்களில் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும் என்று அரச நிர்வாகம், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.**

உள்ளூராட்சிசபைத் தேர்தலின் வேட்புமனுக்களை நிராகரிப்பதற்கான சட்டத் திருத்த செயல்முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று அரச நிர்வாகம், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

பழைய வேட்புமனுக்களை நிராகரிப்பதன் மூலம் 2022ஆம் ஆண்டின் பின்னர் புதிதாக இணைக்கப்பட்ட 10 இலட்சம் வாக்காளர்களுக்கு வாக்களிக்கும் வாய்ப்புக் கிடைக்கும் என அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன. 340 உள்ளூராட்சிசபை நிறுவனங்களுக்காக 8 ஆயிரத்து 711 வேட்பாளர்களை தெரிவு செய்வதற்கான உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் வேட்புமனுக்கள் கோரப்பட்டிருந்தன. அரசியல் கட்சிகள் மற்றும் சுயாதீன குழுக்களிலிருந்து 80 ஆயிரத்து 672 பேர் வேட்புமனுத் தாக்கல் செய்திருந்தனர். அவர்களில் சுமார் 3 ஆயிரம் பேர் அரசாங்க உத்தியோகத்தர்களாவர். அதேவேளை, வேட்புமனுக்களை சமர்ப்பித்த வேட்பாளர்களுள் சுமார் 8 ஆயிரம் பேர் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர் அல்லது உயிரிழந்துள்ளனர் என்று கூறப்படுகின்றது. (ஏ-இ)

## நீதி அமைச்சர் முறைப்பாடு

கொழும்பு, டிசெ.17

நாடாளுமன்ற உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சுயவிவரக் கோவையில் உறுப்பினர்களின் கல்வித் தகைமை மாற்றப்பட்டுள்ள நிலையில், அதுதொடர்பில் நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் நேற்று முறைப்பாடு செய்துள்ளார். (ஏ-இ)

## வடக்கு, கிழக்கில் மழைக்கு வாய்ப்பு



கொழும்பு, டிசெ.17

தென்கிழக்கு வங்கக்கடலில் உருவாகும் குறைந்த காற்றமுத்த தாழ்வு பிரதேசம் குறைந்த அழுத்தப் பிரதேசமாக விருத்தியடைந்து மேற்கு வடமேற்குத் திசையில் நகரக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது. நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், வடக்கு, கிழக்கு, வடமத்திய, ஊவா மற்றும் வடமேல் மாகாணங்களிலும் மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும் மாத்தளை மாவட்டத்திலும் சில இடங்களில் 100 மில்லிமீற்றர்வரை பலத்த மழை பெய்யக்கூடும் என்றும் எதிர்வு கூறப்பட்டுள்ளது. (ஏ-இ)

## முட்டை விலையில் வீழ்ச்சி

கொழும்பு, டிசெ.17

சந்தையில் முட்டையின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது விலை வீழ்ச்சியடைந்திருந்தாலும் பண்டிகைக்காலத்தில் மீண்டும் முட்டையின் விலை உயரக்கூடும் என்று வர்த்தகர்கள் குறிப்பிடுகின்றனர். முட்டை ஒன்று 30 ரூபா முதல் 35 ரூபாவரையில் விற்பனை செய்யப்படுகின்றது என்று கொழும்பு புறக்கோட்டை வர்த்தகர்கள் தெரிவித்தனர். (ஏ-இ)

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com

நாளை
புதன்கிழமை - மார்கழி - 03
18.12.2024
சுபநேரம் : 04.53- 06.23
ராகுகாலம் : 12.23 - 01.53

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவித்தல் - 2025
## வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.

| இல | விடயம் | தொடர்புபட்டோர் | வருடாந்த அறிவித்தல் |
|---|---|---|---|
| 01 | ஆதனவரி | பிரதேச சபை எல்லைக்குட்பட்ட ஆதன உரிமையாளர்கள் | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் கீழ் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி 2025ம் ஆண்டுக்கான ஆதனவரி சுன்னாகம், உடுவில் உப அலுவலகங்களுக்கான மீள்மதிப்பீடு செய்யப்பட்ட வருடாந்த பெறுமதியின் 14% ஆகவும் ஏழாலை உப அலுவலகத்திற்கான ஆதனவரி வருடாந்த பெறுமதியின் 15% ஆகவும் அறவீடு மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய 2025ம் ஆண்டுக்கான ஆதனவரியை 31.01.2025ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவோர் ஆண்டுக்கான மொத்தவரியில் 10% கழிவினைக் பெற்றுக்கொள்ள முடியும் என்பதோடு ஒவ்வொரு காலாண்டுற்குமுரிய வரியை குறித்த கந்தாயத்தின் முதல் மாத முடிவிற்குள் செலுத்துவோருக்கு காலாண்டு வரியில் 5% கழிவு வழங்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன். குறிப்பிட்ட திகதிக்குள் ஆதனவரியை செலுத்த தவறின் விறாந்துக்கட்டணமாக வெற்றுக்காணி அல்லது வதிவிட ஆதனங்களுக்கு 15% உம் ஏனைய ஆதனங்களுக்கு 20% உம் ஆதனவரியுடன் சேர்த்து மேலதிக கட்டணம் அறவிடப்படும். எனவே குறித்த ஆதனவரிகளை 31.01.2025ஆம் திகதிக்கு முன் எமது உப அலுவலகங்களில் முழுமையாகச் செலுத்தி வரிக்கழிவுகளைப் பெற்று ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். |
| 02 | ஆதனப்பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்தல் | ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்யப்படாத ஆதனச் சொந்தக்காரர்கள் | பெயர்மாற்றம் செய்வதற்குரிய ஆவணங்களை பிரதேசசபை உப அலுவலகங்களில் சமர்ப்பித்து பெயர்மாற்றம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். |
| 03 | 1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் / பிறசட்டத்தின் கீழ் கட்டட அனுமதி வழங்கல் | பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பொதுமக்கள் மற்றும் அரச தனியார் நிறுவனங்கள் | 1. எமது நிர்வாகத்திற்குற்பட்ட பிரதேசத்தில் கட்டடங்கள், எல்லைச்சுவர், எல்லைத்தூண்கள், தொலைத் தொடர்பு கோபுரங்கள், மலசல கூடங்கள், குழாய் கிணறுகள் போன்றவற்றை அமைத்தல் அல்லது புதுப்பித்தல் அல்லது பழைய கட்டடத்தினை திருத்த வேலை செய்வதாயின் பிரதேசசபையில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து உரிய அனுமதி பெற்ற பின்னரே அமைக்கப்படல் வேண்டும். தவறின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்திற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.<br>2. புதிய கட்டட விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கும் போது மழை நீர் சேகரிப்பு கட்டுமானங்கள் கட்டாயம் அமைக்கப்படுதல் வேண்டும்<br>3. புதிய கட்டடம் அமைப்பதற்கு உரிய அனுமதி பெற்றவர்கள் அனுமதி பெற்ற திகதியிலிருந்து ஒரு வருட காலத்தினுள் வேலை பூர்த்தியாகாதவிடத்து அவ் விண்ணப்பதாரிகள் உரிய கட்டணம் செலுத்தி கட்டட அனுமதியைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.<br>4. கட்டடம் கட்டி முடிக்கப்பட்டதும் பிரதேசசபையின் அந்தந்த உப அலுவலகங்களுக்கு கட்டிடம் பூர்த்தி செய்தமை தொடர்பில் அறிவித்து உரிய கட்டணத்தை செலுத்தி அமைவுச் சான்றிதழைப் (COC) பெற்றுக் கொண்ட பின்னரே கட்டடத்தில் குடிபுகுதல் வேண்டும்.<br>5. பொதுப்போக்குவரத்திற்கு இடையூறாக சபை அனுமதியின்றி வீதியோரங்களில் அமைக்கப்படும் நிரந்தர அலங்கார அமைப்புக்கள் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.<br>6. அனுமதியற்ற கட்டடங்களை முறைப்படுத்தி சீர்செய்கை நடவடிக்கைக்கான தண்டப்பணம் 1597/8 ஆம் இலக்க 2009.04.17 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக்குடியரசு அதிவிசேஷ வர்த்தமானப்பத்திரிகை பகுதி I தொகுதி (I) பொது அட்டவணை V இன் மேவுதல் அங்கீகாரங்கள் பிரகாரம் அறவீடு செய்யப்படும் |
| 04 | காணி உப பிரிவிடுகை | ஆதனம் ஒன்று பல துண்டுகளாகப் பிரிக்கப்பட்ட ஆதன உரிமையாளர்கள் | ஆதனம் ஒன்று பல துண்டுகளாகப் பிரிக்கப்பட்டு உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து அனுமதி பெற்றுக்கொள்ளல் வேண்டும். |
| 05 | சூழல் பாதுகாப்பு உரிமம் | தொழில் வியாபார நடவடிக்கைகளை பிரதேசசபை எல்லைக்குள் மேற்கொள்வோர் | சூழல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக்கொள்ள வேண்டிய செயற்பாடு தொடர்பாக 2022ஆம் ஆண்டு தை மாதம் 27ஆம் திகதி 2264/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் "ஈ"பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்/ வியாபார நடவடிக்கைகளை பிரதேசசபை எல்லைக்குள் மேற்கொள்பவர்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பபடிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து உரிய கட்டணத்தைச் செலுத்தி சூழல் பாதுகாப்பு உரிமத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். |
| 06 | வியாபார அனுமதிப்பத்திரம் 2025 | பிரதேசசபை எல்லைக்குட்பட்ட சகல வியாபாரம்/தொழில் நிலையத்தவர்கள் | இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் மற்றும் எமது பிரதேசத்திற்குப் பொருள்களை விநியோகிப்போர் உரிய விண்ணப்பப்படிவத்தை உடுவில், சுன்னாகம், ஏழாலை ஆகிய உப அலுவலகங்களில் 2025ஆம் ஆண்டு ஜனவரி 15ஆம் திகதிக்குள் பெற்று அதனைப் பூரணப்படுத்தி உரிய உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31.03.2025 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி வியாபார அனுமதிப்பத்திரத்தை (Trade license) பெற்றுக்கொள்ளவும். 31.03.2025ஆம் திகதிக்கு முன்னர் வியாபார அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். |
| 07 | துவிச்சக்கரவண்டி உரிமம் | துவிச்சக்கரவண்டி உரிமையாளர்கள் | துவிச்சக்கரவண்டிகள் வைத்திருப்போர் 2025.03.31 ஆம் திகதிக்கு முன் உரிய உப அலுவலகங்களில் உரியகட்டணங்களை செலுத்தி 2025ம் ஆண்டுக்கான துவிச்சக்கர வண்டி உரிமங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். |
| 08 | மிருகங்களுக்கன உரிமம் | வளர்ப்பு நாய் உரிமையாளர்கள் | வளர்ப்பு நாய்கள் வைத்திருப்போர் 2025.03.31ஆம் திகதிக்கு முன் சபையின் உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களை செலுத்தி பதிவு செய்து 2025 ஆம் ஆண்டுக்கான மிருக உரிமங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். |
| 09 | விளம்பரங்கள் அமைத்தல் அல்லது காட்சிப்படுத்தல் | விளம்பரங்களை காட்சிப்படுத்தும் முகவர்கள், நிறுவனங்கள், வர்த்தக உரிமையாளர்கள் | பிரதேசசபை எல்லைக்குள் அமைக்கப்படும் விளம்பரப் பலகைகளுக்கு பிரதேசசபையின் அனுமதியைப் பெற்றே விளம்பரங்களைக் காட்சிப்படுத்த வேண்டும். அனுமதி பெறப்படாத விளம்பரங்கள் சபையினால் அகற்றப்படும். கட்டண விபரம் பின்வருமாறு (கீழ்வரும் அட்டவணை) |
| 10 | வீதி ஒழுங்கும் தெருவோர வியாபாரமும் | பாதசாரிகள், வாகன ஓட்டுநர்கள் மற்றும் வியாபாரிகள் | வீதி ஒழுங்கைப்பேணி நடக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றது. வியாபார நிலையங்களிற்கு முன்னால் பாதசாரிகளின் போக்குவரத்திற்கு இடையூறாக பொருட்களை வெளியே வைத்து விற்பனை செய்வது, காட்சிப்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு வர்த்தக நிலைய உரிமையாளர்களிற்கு அறியத்தருகின்றேன். மேலும் சந்தைச் சுற்றாடலில் இருந்து 500மீற்றர் சுற்றுவட்டாரத்தில் கடல் உணவுகள்,மரக்கறி, முட்டை என்பன விற்பது தடைசெய்யப்பட்டுள்ளது .சுகாதாரத்திற்கு ஒவ்வாத அனுமதியற்ற நடமாடும் சுண்டல் ,சோளம் மற்றும் தீன்பண்ட விற்பனை தடை செய்யப்படுகின்றது. (விசேட சந்தர்ப்பங்களில் உரிய அனுமதி பெறப்படல் வேண்டும்) |
| 11 | பொதுச் சுகாதாரத்தைப் பேணுதல் | உணவு கையாளும் நிலையங்கள் | உணவுகையாளும் நிலையப் பணியாளர்கள் மருத்துவப் பரிசோதனை மேற்கொண்டு அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.<br>2034/33 ஆம் இலக்க 2017.09.01 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அதிவிசேட வர்த்தமானப்பத்திரிகையின் பிரகாரம் 20 மைக்ரோன் அல்லது அதற்கு குறைவான தடிப்புள்ள பொலித்தீன் பாவனை தடை செய்யப்பட்டுள்ளது. |
| 12 | பொது இடங்களில் கழிவுபோடுதலும் டெங்கு நுளம்புப் பெருக்கத்திற்கு ஊக்கம் அளிப்பதும் | பொதுமக்கள், வியாபார நிலையங்கள், அரச தனியார் நிறுவனங்கள் | திண்மக்கழிவுகளை பிரதேசசபைக்கு ஒப்படைக்கும் போது அவை தரம் பிரித்து வழங்கப்பட வேண்டும் என்பதுடன் திண்மக்கழிவுகள் பொது இடத்தில் கொட்டுதல் முற்றாக தடைசெய்யப்படுவதோடு நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவாக சூழலை வைத்திருப்போர் மீது சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும்<br>அபிவிருத்தி செய்யப்படாத காணிகளில் உள்ள பற்றைகள் துப்பரவு செய்யப்படல் வேண்டும்<br>பொதுப்போக்குவரத்திற்கு இடையூறாக வீதியோரங்களில் பூமரங்கள் நாட்டுதல் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. |
| 13 | படவரைஞர்களை பதிவு செய்தல் | படவரைஞர்கள் | 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் 47 தொடக்கம் 59 வரையானதுடன், மற்றும் 1978 ஆண்டின் 41ம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபையின் புதிய திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி ஆணை/ ஒழுங்கு விதி நடைமுறைகளுக்கமைவாகவும் வலி தெற்கு பிரதேச சபையில் 2025ஆம் ஆண்டு படவரைஞராகப் பதிவுசெய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவுசெய்துள்ளவர்களும் 2025ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளவும் / புதுப்பித்துக்கொள்ளவும், கல்வித் தகைமை Drafting Technology Cavil NVQ Level - 5 இருத்தல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு தலைமை அலுவலகத்துடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும். |

(09 - கட்டண விபரம்)

| இல | நிரல் I விபரங்கள் | | நிரல் II அறவிடப்படும் கட்டணம் ரூபா ச. |
|---|---|---|---|
| 1. | இலத்திரனியல் விளம்பர பலகைகள் | ஒருசதுர அடிக்கு | 260.00 |
| 2. | இலத்திரனியலற்ற விளம்பர பலகை | ஒருசதுர அடிக்கு | 160.00 |
| 3. | பெயர் பலகைகள் | ஒருசதுர அடிக்கு | 60.00 |
| 4. | நிலைச்சட்டங்கள் | ஒருசதுர அடிக்கு | 110.00 |
| 5 | விசேட நாட்களில் காட்சிப்படுத்தும் விளம்பரங்கள் | - | 60.00 |
| 6 | நாள் ஒன்றுக்கு விளம்பர சேவை | நடமாடும் விளம்பர சேவை | 3,000.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ச்சி அடுத்த பக்கம்

முதல் பக்கத் தொடர்ச்சி

| | | | |
|---|---|---|---|
| 14 | தரகர் முறை நீக்கல் கழிவு நடை முறைக்கு தடை | சந்தைக் குத்தகையாளர்கள் | எமது பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சந்தைகளில் தரகர் மூலமான நடைமுறை முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு சந்தைக்குத்தகையாளர் வேண்டப்படுகின்றனர். ,அத்துடன் நிலக்கீழ் விளைச்சல் தவிர்ந்த ஏனைய மரக்கறிகளுக்கு கழிவு முறை முற்றாக தடை செய்யப்படுகின்றது என்பது அறியத்தரப்படுகின்றது. |
| 15 | இரசாயன மருந்து விசிறிய பழங்கள் | வியாபாரிகள் | அனுமதியற்ற நியமங்களை மீறி மருந்து விசிறிய பழங்கள் விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்து. |
| 16 | கழிவுநீர் | பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பொதுமக்கள் மற்றும் அரச தனியார் நிறுவனங்களை | பகிரங்க வடிகால்களில் அனுமதியின்றி வீட்டுக்கழிவுநீர், வியாபார கழிவுநீர் சேர்க்கப்பட்டால் சட்டவிரோதமானது என உரியவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| 17 | பொதுப்போக்குவரத் துக்கு இடையூறாகவும் டெங்கு பரவலுக்கு ஏற்ற வகையில் பெரும் கட்டுமான பொருட்களை வைத்தல். | பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பொதுமக்கள் மற்றும் அரச தனியார் நிறுவனங்கள் | பொது வீதியில் சபை அனுமதியின்றி கட்டுமான பொருட்கள் சேகரித்து வைத்தல், உரிய குறியீடுகள் காட்சிப்படுத்தாது விடல் மற்றும் டெங்கு நோய்காவி பரவும் ஆபத்தான நிலைமைகளை பேணுதல் தவிர்க்கப்படல் வேண்டும். |
| 18 | நடைபாதை வியாபாரிகள் | வீதி ஓரங்களில் தொழில் / வியாபார நடவடிக்கைகளை பிரதேசசபை எல்லைக்குள் மேற்கொள்வோர் | 1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி 1998.08.23ஆந் திகதிய 520/7ஆம் இலக்கத்தின் அதிவிசேட வர்த்தமானியின் "பகுதி IV (ஆ)" உள்ளூராட்சி அமைச்சர் அவர்களினால் வெளியிடப்பட்டுள்ள துணைவிதிகளின் கீழ் 28 ஆம் பிரிவின் படி வலிகாமம் தெற்கு பிரதேசசபை எல்லைக்குள் கொண்டு திரிந்து வியாபாரம் செய்யும் நடைபாதை வியாபாரிகளுக்கு கீழ்க்காட்டப்பட்ட இடங்களில் மட்டும் விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஏனைய பொது இடங்களில் விற்பனை செய்வது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.<br>01. இணுவில் பொதுச்சந்தைப்பகுதி<br>02. மருதனார்மடம் பொதுச்சந்தைப்பகுதி<br>03. சுன்னாகம் பொதுச்சந்தைப்பகுதி |

மேற்கூறிய விடயங்கள் தொடர்பில் பொதுமக்கள் மற்றும் தொழில் புரிபவர்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது. குறித்த அறிவித்தலின் பிரகாரம் செயற்படத் தவறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திருமதி சாரதா உருத்திரசம்பவன்**
**செயலாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை,**
**சுன்னாகம்.** **021 224 0017 / 021 205 3001**

# ஹனுமத் ஜெயந்தி இலட்சார்ச்சனை

யாழ்ப்பாணம், டிசெ.17

இணுவில், மருதனார்மடம், சுன்னாகம் அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயிலின் ஹனுமத் ஜெயந்தி இலட்சார்ச்சனைப் பெருவிழா நாளை புதன்கிழமை தொடக்கம் 30ஆம் திகதி திங்கட் கிழமைவரை நடைபெறவுள்ளது. தினமும் காலை 8 மணிக்கு அபிஷேகமும், 9.30 மணிக்கு பூஜை, அர்ச்சனை, ஹோமமும், 11 மணிக்கு இசை ஆராதனையும், தினமும் மாலை 4 மணிக்கு அபிஷேகமும், 5 மணிக்கு பூஜை, அர்ச்சனை, ஹோமமும் நடைபெறவுள்ளன. எதிர்வரும் 28ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு இலட்சார்ச்சனை பூர்த்தி விழாவும், 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5.30 மணிக்கு அபிஷேகமும், காலை 7 மணிக்கு வசந்த மண்டப பூசையும், காலை 9 மணிக்கு தேர்ப் பவனியும், மாலை 4.30 மணிக்கு பிராயச்சித்த அபிஷேகம் மற்றும் பஞ்சமுக அர்ச்சனையும், 30ஆம் திகதி திங்கட்கிழமை ஹனுமத் ஜெயந்தி தினத்தில் காலை 6 மணிக்கு சங்கல்பமும், மு.ப. 10.30 மணிக்கு 108 கலச அபிஷேகமும், மு.ப. 11 மணிக்கு ஆன்மிக உரையும், நண்பகல் 12 மணிக்கு சந்தன அலங்காரப் பூசையும், பிரசாதம் வழங்கலும் நடைபெறும் என ஆதீனக்கர்த்தா சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள் தெரிவித்துள்ளார். (எ-45-10)

# முதியோருக்கான கொடுப்பனவு

தென்மராட்சிப் பிரதேச முதியோர்களுக்கான நவம்பர், டிசெம்பர் மாதங்களுக்குரிய கொடுப்பனவுகள் நேற்றுத் திங்கட்கிழமை தொடக்கம் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களில் விநியோகிக்கப்பட்டு வருகிறது. கொடுப்பனவை எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் பெற்றுக் கொள்ளவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை முதியோர் கொடுப்பனவுகள் பெற்று அஸ்வெசும நலன்புரித் திட்டத்தில் இணைக்கப்பட்ட முதியோர்களுக்கான கொடுப்பனவு அந்தந்த வங்கிகளில் விநியோகிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ரி-9)

+++++

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் முதியோர் கொடுப்பனவுகள் பெறுவோர்க்கான டிசெம்பர் மாதக் கொடுப்பனவு நேற்று திங்கட்கிழமை தொடக்கம் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களில் விநியோகிக்கப்பட்டு வருகிறது. வருட இறுதிக் கணக்குகள் முடிவுறுத்தவுள்ளதால் கொடுப்பனவை விரைவில் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ரி-9)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். தந்தை வழியில் ஆதாயம் கிடைக்கும். மனதில் உற்சாகம் உண்டாகும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் வாய்ப்பு உண்டு. அலுவலகத்தில் முக்கியமான பொறுப்பு ஒன்றுக்கு உங்கள் பெயர் பரிந்துரைக்க வாய்ப்பு உண்டு.

**இடபம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். ஆனாலும், வீண் செலவுகளும் ஏற்படக்கூடும். கணவன் மனைவிக்கிடையே இருந்த கருத்துவேறுபாடு நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். வாழ்க்கைத் துணையின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். துணிச்சலாக சில முடிவுகளை எடுப்பீர்கள்.

**கடகம்:** மகிழ்ச்சியான நாள். எதிர்பாராத பணவரவு உண்டாகும். தாய்மாமன் வகையில் எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். மாலையில் உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உண்டாகும்.

**சிம்மம்:** மனதில் தைரியமும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். முக்கியமான பிரமுகர்களின் அறிமுகம் கிடைப்பதுடன், அவர்களால் ஆதாயமும் கிடைக்கும்.

**கன்னி:** தாயின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால் உணவு விஷயத்தில் கவனம் தேவை. பிள்ளைகளின் தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள். சிலருக்கு திடீர் பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**துலாம்:** புதிய முயற்சிகள் அனுகூலமாகும். கணவன் மனைவிக்கிடையே சிறுசிறு கருத்து வேறுபாடுகள் ஏற்படக்கூடும் என்பதால் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபடவேண்டாம். குடும்பத்தில் மற்றவர்களை அனுசரித்துச் செல்லவும். வாகனத்தில் செல்லும்போது எச்சரிக்கை தேவை. எதிர்பாராத செலவுகளால் சிலர் கடன் வாங்கவும் நேரிடும்.

**தனுசு:** மனதில் சஞ்சலம் ஏற்படும். வீண் செலவுகளால் கையிருப்பு கரையும். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத் தருவார்.

**மகரம்:** மனதில் உற்சாகம் உண்டாகும். சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மாலையில் உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படக்கூடும். புதிய டிசைனில் ஆடைகள் வாங்கி மகிழ்வீர்கள்.

**கும்பம்:** திடீர்ச் செலவுகள் ஏற்படும். தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். பிற்பகலுக்கு மேல் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**மீனம்:** உற்சாகமான நாள். வாழ்க்கைத்துணை வழியில் சுபச் செலவுகள் ஏற்படும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உங்கள் தேவைஅறிந்து மற்றவர்கள் உதவி செய்வார்கள். குடும்பத்தில் மற்றவர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவிப்பு

இலங்கைப் பத்திரிகைப் பேரவையின் 69 ஆவது ஆண்டு விழா மற்றும் டி. எஸ் காரியகரவன நினைவு தின ஊடக கௌரவ விழா ஊடக மற்றும் சுகாதார அமைச்சர் மருத்துவர் நலிந்த ஜயதிஸ்ஸ தலைமையில், ஊடக பிரதம விருந்தினர்களின் பங்களிப்புடன் கொழும்பு 7, சுதந்திர மாவத்தை, இலங்கை மன்றக் கல்லூரி கேட்போர் கூடத்தில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெறும். நிகழ்வில் சிரேஷ்ட ஊடகவியலாளர்களான பி.பி. இலங் கசிங்க, துசித்த மலல சேகர, தயா லங்காபுர, எஸ்.எஸ். செல் வநாயகம், என்.எம். அமீன், வீ.தனபாலசிங்கம், அலெக் சாண்டர் பாலசூரிய, ஸ்டேன்லி சமரசிங்க, உபாலி அரம்பவெல மற்றும் சிரேஷ்ட ஊடகவியலாளர் திருமதி சீலா விக்ரமசிங்க ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளார்கள். (ஏ-45)

# அஸ்வெசும கொடுப்பனவு

சாவகச்சேரி, டிசெ.17

தென்மராட்சி மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேசங்களில் வதியும் 'அஸ்வெசும' நலன்புரித் திட்டப் பயனாளிகளுக்கான டிசெம்பர் மாதக் கொடுப்பனவுகள் நேற்று திங்கட் கிழமை தொடக்கம் அந்தந்த வங்கிகளில் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இதேவேளை நலன்புரித் திட்டத்தில் இணைக்கப்படாத சில குடும்பங்களுக்கு நவம்பர், டிசெம்பர் மாதங்களுக்குரிய கொடுப்பனவுகள் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களில் விநியோகிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ரி-9)

# நிலத்தடி நீர் பேணலுக்கான ஆளணிப் பயிற்சிப் பட்டறை



யாழ்ப்பாணம், டிசெ.17

வடக்கில் நிலத்தடி நீர் பேணலுக்கான மூன்று நாள் ஆளணிப் பயிற்சிப்பட்டறை நடைபெறவுள்ளது. 'நெடுங்கால நோக்குக் கொண்ட நீர்ப் பாதுகாப்பு அல்லது நீர் உத்தரவாதம்' எனும் தலைப்பில் 'வஸ்பார்' ஆய்வுத் திட்டம் யாழ். பல்கலைக்கழகத்தின் தலைமையில் நாளை புதன்கிழமை காரைநகரிலும், நாளை மறுதினம் வியாழக்கிழமை அளவெட்டியிலும், 20ஆம் திகதி யாழ். பல்கலை மருத்துவ பீட அரங்கிலும் காலை 9.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை இடம்பெறவுள்ளது. இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் நிலத்தடி நீர் பாதுகாப்பில் நீண்ட அனுபவம் கொண்டவரான கலாநிதி யோகேஷ் ஜடேஜா இந்தப் பயிற்சியை வழங்கவுள்ளார். மேலதிக விவரங்களை 0776994880 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ரி-45)


## பச்சிலைப்பள்ளி பிரதேசசபை - பளை

### பளைநகர பொதுச்சந்தை 12 கடைத்தொகுதி கடைகளை நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி அறிவித்தல் - 2024

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 17.12.2024 தொடக்கம் 30.12.2024 பிற்பகல் 2 மணிவரை (அலுவலக நேரம் )
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி :- 30.12.2024 பிற்பகல் 2 மணி
கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 30.12.2024 பிற்பகல் 2 மணி
கேள்வி திறக்கப்படும் இடம் :- பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, தலைமை அலுவலகம்

பளைநகர பொதுச்சந்தை 12 கடைத்தொகுதி கடைகளுக்கான கேள்வி அட்டவணை.

| இல | கடை இலக்கம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கப்பட கூடியது) | கேள்விப்படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| மேற்தரை | | | | |
| 1. | PMS-07 | 1,440,000.00 | 21,600.00 | 2,000.00 |
| 2. | PMS-08 | 1,440,000.00 | 21,600.00 | 2,000.00 |
| 3. | PMS-11 | 1,440,000.00 | 21,600.00 | 2,000.00 |
| 4. | PMS-12 | 1,440,000.00 | 21,600.00 | 2,000.00 |

நிபந்தனைகள்:-

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும். அத்துடன் பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் எல்லைக்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும். (வதிவிடச்சான்றிதழ் இணைக்கப்படுதல் வேண்டும்).
02. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கை கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமூகமளிக்க வேண்டும்.
03. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "செயலாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை பளை" என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக இட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை "பிரந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சி" என்ற முகவரிக்கு 30.12.2024 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
04. ஒருவர் பல கடைகளுக்கு விண்ணப்பிக்குமிடத்து சபைக்கு நட்டம் ஏற்படாதவாறு மிகபொருத்தமானது என கருதும் சித்திரகுத்தகைதாரருக்கு, ஒருவருக்கு (ஒரு குடும்பத்திற்கு) ஒருகடை மாத்திரமே சபையினால் வழங்கப்படும் என்பதுடன் ஏற்கனவே பிரதேசசபையின் அறைவாடகை கடைகளை நீண்டகால குத்தகைக்கு பெற்றவர்கள் விண்ணப்பிக்கமுடியாது.
05. நீண்டகால குத்தகைக் கடைகளுக்கு மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்தவேண்டும்.
06. குறித்த கடையினை ஒப்பந்ததாரர் எந்தவகையிலும் உபவாடகைக்குக் கொடுக்கவோ, உரிமை மாற்றம் செய்யவோ முடியாது.
07. குறித்த கடைகளில் சகிக்கமுடியாத தொழில்கள், அபாயகரமான தொழில்கள் மற்றும் சகிக்கமுடியாததும் அபாயகரமானதுமான தொழில்கள் ஆகிய வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாது.
08. கேள்விச் சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் கேள்வித் தொகையினை முழுமையாக செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொண்டு பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தினை செய்துகொள்ளவேண்டும்.
09. சித்திகரகுத்தகைதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேசசபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்துகொள்ளல் வேண்டும்.
10. சித்திகர குத்தகைதாரர் பாதுகாப்பு வைப்புப்பணமாக 03 மாத கால வாடகை தொகையினை முற்பணமாக செலுத்தவேண்டும்.
11. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபாரவரி, உரிம கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
12. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு.
13. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

திருமதி.த.நர்சினி.
செயலாளர்,
பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை.

17.12.2024.

(CR/63603) J-1


# பல்கலைக்கழகங்களுக்கு இடையே மேசைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி




யாழ்ப்பாணம், டிசெ,17

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப்பொன்விழாநிகழ்வுகளின் வரிசையில் இலங்கையிலுள்ள அனைத்து அரச பல்கலைக்கழகங்களுக்கும் இடையில் நடத்தப்பட்ட மேசைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி கடந்த சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஏற்பாட்டில், இலங்கைப் பல்கலைக்கழகங்களின் விளையாட்டுச் சம்மேளன அங்கீகாரத்துடன் இலங்கையிலுள்ள அனைத்து அரச பல்கலைக்கழகங்களினதும் ஆண், பெண் அணிகளுக்கிடையில் போட்டிகள் இடம்பெற்றன. ஆண்கள் பிரிவில், மொறட்டுவப் பல்கலைக்கழக அணி அதிக புள்ளிகளைப் பெற்றுச் சம்பியன் பட்டத்தைத் தனதாக்கிக் கொண்டது. ஸ்ரீ ஜெயவர்த்தனபுர, களனிப் பல்கலைக்கழகங்களின் அணிகள் முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களைத் தமதாக்கிக்கொண்டன. பெண்கள் பிரிவில், ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக அணி அதிக புள்ளிகளைப் பெற்றுச் சம்பியன் பட்டத்தைத் தனதாக்கிக் கொண்டது. மொறட்டுவ, கொழும்புப் பல்கலைக்கழகங்களின் அணிகள் முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களைத் தமதாக்கிக்கொண்டன. (ஏ-33-125)

# விநாயகர் விரதம் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ.17

கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் விநாயகர் பெருங்கதை விரதம் நேற்று திங்கட்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 21 நாள்கள் இடம்பெறும். தினமும் காலை 9 மணிக்கு அபிஷேகம்,பூசைகள், பஞ்சமுக அர்ச்சனை, பெருங்கதை பரப்பு என்பன இடம்பெறும். (ஏ-45-17)

+++++

யாழ்ப்பாணம், டிசெ.17

கொழும்புத்துறை மேற்கு வதரிபீட ஆலயத்தில் விநாயகர் பெருங்கதை விரதம் நேற்று திங்கட்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 21நாள்கள் இடம்பெறும்.
தினமும் காலை 9 மணிக்கு அபிஷேகம், பூசைகள், பஞ்சமுக அர்ச்சனை, பெருங்கதை பரப்பு என்பன இடம்பெறும். (ஏ-45-17)

+++++

யாழ்ப்பாணம், டிசெ.17

வண்ணை சாந்தையர் மடம் கற்பக விநாயகர் ஆலயத்தில் விநாயகர் பெருங்கதை விரதம் நேற்று திங்கட்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 21 நாள்கள் இடம்பெறும். தினமும் காலையும், மாலையும் சிறப்புப் பூசைகள் இடம்பெறும். (ஏ-45-17)

+++++

யாழ்ப்பாணம், டிசெ.17

நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்தில் விநாயகர் விரதத்தை முன்னிட்டு நேற்று திங்கட்கிழமை விநாயகப் பெருமானுக்கு சிறப்புப் பூசைகள் இடம்பெற்றன. (ஏ-45-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த (18.11.2024) திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர்**
**செல்லையா பாலசுப்பிரமணியம்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (17.12.2024) செவ்வாய்க்கிழமை காலை 06.30 மணியளவில் கசூரினா புனித தீர்த்தக் கரையிலும், சபிண்டீகரணக் கிரியைகள் நாளை (18.12.2024) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தோற்றம் 15.11.1939 — மறைவு 18.11.2024

மாப்பாணவூரி,
காரைநகர்.

**குடும்பத்தினர்**

(CS/56947) J-1

## கல்வித் தகைமை தொடர்பான கருத்தாடல்கள் பெருமையே!

### நீதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 17
இலங்கையில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கல்வித் தகைமை தொடர்பில் கேள்வி எழுப்பப்படுகின்றது. இதுவே ஆகச்சிறந்த மாற்றம் என்று நீதி அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
"நாடாளுமன்ற இணையத்தளத்தில் எனது பெயர் கலாநிதி ஹர்ஷன எனப் பெயரிடப்பட்டிருந்தது. அது தொடர்பில் என்னால் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டையடுத்து நீக்கப்பட்டது. இது தொடர்பில் நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களத்தால் மன்னிப்பும் கோரப்பட்டிருந்தது.
எனினும், இந்தச் சம்பவத்தைப் பயன்படுத்தி எனக்கு எதிராக தீவிரமான பரப்புரைகள்
முன்னெடுக்கப்பட்டுள்ளன. நான் 25 வருடங்களாக சட்டத்தரணியாகச் செயற்பட்டுள்ளேன். ஒருபோதும் எனது பெயருக்கு முன்னால் கலாநிதிப் பட்டத்தைப் பயன்படுத்தியது கிடையாது. எனவே, எதற்காக இவ்வாறு பயன்படுத்தப்பட்டது என்று எமக்குத் தெளிவூட்டவேண்டும்.
அதனால் இது தொடர்பில் முழுமையான விசாரணை நடத்துமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் முறைப்பாடு செய்துள்ளேன். எவ்வாறு இந்தத் தவறு நடந்தது என்பது கண்டறியப்பட வேண்டும்.
தேசிய மக்கள் சக்தியென்பது தூய்மையான அரசியல் இயக்கமாகும். மக்கள் இன்று கல்வித் தகைமை தொடர்பில் கேள்வி எழுப்புகின்றனர். இதுதான் சிறந்த மாற்றம். ஏனெனில் இதற்கு முன்னர் மதுபானசாலை அனுமதிப் பத்திரங்கள் தொடர்பில்தான் பேசப்பட்டன. கப்பம் கோருபவர்கள், மண் கடத்துபவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாகஇருந்துள்ளனர். ஆனால் இன்று கல்வித் தகைமை பற்றி கருத்தாடல் இடம்பெறுவது பெருமையளிக்கின்றது" - என்றார். (ம-24)

## வலிகாமம் தென்மேற்கு பண்பாட்டுப் பெருவிழா!

யாழ்ப்பாணம், டிசெ. 17
வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரனையுடன் மற்றும் வலிகாமம் தென்மேற்குப் பிரதேச செயலகம் நடத்தும் பண்பாட்டுப் பெருவிழா, குபேர மஹால் மண்டபத்தில் நாளை புதன்கிழமை பிற்பகல் 1.45 மணிக்கு இடம்பெறவுள்ளது.
சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் சுபாஜினி மதியழகன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் மாவட்ட பதில் செயலாளர் மருதலிங்கம் பிரதீபன் கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் திருமதி லாகினி நிருபராஷ் கலந்துகொள்ளவுள்ளார். (ம-22)

## மயக்க மருந்து கொடுத்து ஓட்டோ திருடியவர் கைது

வவுனியாவில் மயக்க மருந்து கொடுத்து ஓட்டோக்களைத் திருடி விற்பனை செய்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் நேற்றுத் தெரிவித்துள்ளனர்.
சந்தேகநபர், ஓட்டோக்களைக் கடத்தி வர்ணத்தை மாற்றி, போலியான இலக்கத்தகடு மற்றும் போலியான ஆவணங்களை வைத்து அவற்றை விற்பனை செய்தமை தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் கூறியுள்ளனர். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-18)

## அனுமதியின்றி மருத்துவமனைக்குள் நுழைய அர்சுனா எம்.பி.க்குத் தடை

### கண்டிப்பான அறிவுறுத்தலுடன் பிணை வழங்கியது நீதிமன்று

யாழ்ப்பாணம், டிசெ. 17
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குள் அத்துமீறி நுழைந்தமை தொடர்பான வழக்கில், நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவுக்குத் தடை விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதுடன், பிணை நிபந்தனைகளை மீறக்கூடாது என்றும் இறுக்கமாக அறிவுறுத்தியுள்ளது.
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குள் கடந்த வாரம் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் அர்ச்சுனா மற்றும் சட்டத்தரணி ந.கௌசல்யா ஆகியோர் அத்துமீறி நுழைந்து மருத்துவர்களின் கடமைக்கு இடையூறு விளைவித்ததாக மருத்துவமனையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.
இது தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. இதன் போதே, பணிப்பாளரின் முன் அனுமதியின்றி அத்துமீறி நுழைதல், முறைப்பாட்டாளருக்கு இடையூறு விளைவித்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடக்கூடாது என சந்தேகநபர்களுக்கு அறிவுறுத்திய நீதிவான், சந்தேகநபர்களைப் பிணையில் செல்ல அனுமதித்தார்.
வழக்கைத் தொடர்ந்து கொண்டு நடத்துவது தொடர்பில், சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறுமாறும் பொலிஸாருக்கு நீதிவானால் அறிவுறுத்தப்பட்டது. (ம-26-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேருந்தில் பயணித்தவர் திடீரென மயங்கிச் சாவு

யாழ்ப்பாணம், டிசெ. 17

யாழ்ப்பாணம் நோக்கி நேற்றுக்காலை பேருந்தில் பயணித்த முதியவர் ஒருவர் திடீரென மயக்கமடைந்து உயிரிழந்துள்ளார். இளையதம்பி சிவசுப்பிரமணியம் (வயது -71) என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பேருந்தில் பயணித்தவர்களால் அவர் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், அவர் முன்னதாகவே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். இறப்பு விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-26)

## நாஹா மருத்துவ நிலையம்

கை. கால் தீவிரவிறைப்பு, பாரிசவாதம்.
முழங்கால் பாதிப்பு தோள்மூட்டு.
முள்ளந்தண்டுவிலத்தல். மாறாத புண்கள்
நீரிழிவு - நிபுணத்துவ மருந்தியல்

T.P.: 077 321 2740
வங்கி முன்லேன் சாத்தாவத்தை
வைரவர் கோயிலடி மானிப்பாய்.

## கேள்வி அறிவித்தல்

செட்டிக்குளம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு சொந்தமான சூடுவெந்தபுலவு மற்றும் ஆண்டியாபுளியங்குளம் கிளை நிலையங்கள் வாடகைக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. வாடகைக்கு எடுக்க விரும்புபவர்கள் கேள்விப் பத்திரங்களை எதிர்வரும் 31.12.2024 இற்கு முன்னர் கிடைக்கக் கூடிய வகையில் செட்டிக்குளம் பல நோ.கூ. சங்கம். பிரதான வீதி, செட்டிக்குளம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

தலைவர்,
பொதுமுகாமையாளர், 077 202 1389
செட்டிக்குளம் பல நோ.கூ.சங்கம். 077 441 7537

(CS/29070) J-1

## யாழ்ப்பாணம் மாநகர சபையின் சட்ட ஆலாசகர் பதவிக்கான விண்ணப்ப காலம் நீடிக்கப்படல் தொடர்பானது


சட்ட ஆலாசகர் பதவிக்கான விண்ணப்பம் கோரல் தொடர்பாக **29.11.2024** ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட மேற்படி விளம்பரத்தின் விண்ணப்ப முடிவுத்திகதி மேலும் **23.12.2024** ஆம் திகதி வரை நீடிக்கப்படுகின்றது.

**மாநகர ஆணையாளர்,**
**மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

(cr.43901) (N-1)

## மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 03 . 1937



மறைவு 18 . 16 . 2024

### கந்தசாமி பாலாமணி

காரைநகர் கோவளம் மணற்பிட்டி மெலிஞ்சிலடையை சேர்ந்த கந்தசாமி பாலாமணி நேற்று (16.12.2024) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - பார்வதி தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற கந்தப்பு கந்தசாமியின் அன்பு மனைவியும், சல்லையை சேர்ந்த சந்தனத்தின் மருமகளும், காலஞ்சென்ற பூரணம், அருளம்பலம், மனோன்மணி, தம்பிராசா ஆகியோரின் சகோதரியும், தங்கேஸ்வரி, தவமணி, டொக்டர் கணேஸ்வரராஜா, மகேஸ்வரி, அங்கயற்கண்ணியும் ஆகியோரின் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.12.2024) செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியளவில் அறுகம்புலத்தில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**Dr. கணேஸ்**
**071 8287 658**

(CS 2063) A-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 01 . 1947



மறைவு 15 . 12 . 2024

### திரு. இளையகுட்டி நாகரத்தினம்

(காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத் தாபன ஊழியர்)

அம்மன் கோயிலடி பலாலியை பிறப்பிடமாகவும் மயிலங்கூடல் இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு இளையகுட்டி நாகரத்தினம் நேற்றுமுன்தினம் (15.12.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் பலாலியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான இளையகுட்டி-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான விநாயகர்-இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் பாசமிகு கணவரும் ஞானரூபி (லண்டன்), சுபிதா (அபிவிருத்தி உத்தியோகத்தர், சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்), கவிதா (லண்டன்) ஆகியோரின் ஆருயிர் தந்தையும் ஸ்ரீரஞ்சிதகுமார் (லண்டன்), கருணாகரன், கெங்காதரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ரம்யா, பிரவீன், அவிநாஸ் (லண்டன்), ஜஸ்மிகா, சாஹிசன், அன்ஜய் (லண்டன்), ஆகியோரின் பேரனும் சரஸ்வதி, விமலதாஸ், சரோஜாதேவி, வாமதேவன், மல்லிகாதேவி ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (17.12.2024) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் கீரிமலை செம்மன் வாய்க்கால் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்

**மயிலங்கூடல்,**
**இளவாலை**

தகவல்:
**குடும்பத்தினர்.**
**077 534 0383**

(CS56941) N-1

## மரண அறிவித்தல்



### சீவரத்தினம் விஜயகுமார்

யாழ்ப்பாணம் கந்தர்மடத்தை பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட சீவரத்தினம் விஜயகுமார் கடந்த 05.12.2024 அன்று காலமானார்.

அன்னார் சீவரத்தினம்-நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா-சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், சிவாஜினி (சிவா)யின் (பிரான்ஸ்) பாசமிகு கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.12.2024) செவ்வாய்க்கிழமை வட்டுக்கிழக்கு வட்டுக்கோட்டையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்


தொடர்புகளுக்கு :-
சின்னத்துரை-பராசக்திவேல்
(மைத்துனர் சித்தப்பா)
சிவசக்தி இல்லம்
நெத்தாசி லேன், வட்டுகிழக்கு, வட்டுக்கோட்டை
071 521 3479

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CS 2062) P-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







இந்திய உயர்மட்ட அதிகாரிகளை சந்தித்தார் அநுர!

## முன்னாள்...

யாடல்களில் ஈடுபட்டுவிட்டு இன்று நாட்டுக்குத் திரும்பும் நிலையிலேயே, முன்னாள் ஜனாதிபதியின் இந்தியப் பயணம் தொடர்பான அறிவித்தல் வெளிவந்துள்ளது.

இதேவேளை - கடந்த இரண்டு மாதங்களுக்குள் ரணில் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ளும் இரண்டாவது சந்தர்ப்பம் இதுவாகும். முதலாவது பயணத்தின்போது இராஜதந்திர சந்திப்புகளில் அவர் ஈடுபடவில்லை. எனினும், இம்முறை முக்கியத்துவமிக்க சந்திப்புகளில் ஈடுபடுவார் என்று தெரியவருகின்றது.

ஒரு வாரத்துக்கு மேல் இந்தியாவில் தங்குவதற்குத் திட்டமிட்டுள்ள ரணில் விக்கிரமசிங்க, விசேட உரைகளையும் நிகழ்த்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## இராமேஸ்வரம்...

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான தொடர்பை மேம்படுத்தும் வகையில் இராமேஸ்வரம் மற்றும் தலைமன்னாருக்கு இடையே விரைவில் படகுச்சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தியப் பிரதமர் மோடிக்கும், ஜனாதிபதி அநுரகுமாரவுக்கும் இடையில் நேற்று மாலை நடைபெற்ற கலந்துரையாடல்களின் அடிப்படையில் இது தொடர்பான ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது.

அத்துடன், இந்திய அபிவிருத்தி ஒத்துழைப்பைத் தொடர்ந்து முன்னெடுக்கும் வகையில், அநுராதபுரம் ரயில் சமிக்ஞைக் கட்டமைப்பு மற்றும் காங்கேசன்துறை துறைமுக புனரமைப்பு என்பவற்றுக்கு உதவி வழங்குவது தொடர்பிலும் இதன்போது நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றது. (அ-ம-இ)

## தமிழர்களின்...

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மூன்று நாள்கள் பயணம் மேற்கொண்டு நேற்றுமுன்தினம் இந்தியாவுக்குச் சென்றுள்ளார். உயர்மட்ட அதிகாரிகளுடனான சந்திப்பைத் தொடர்ந்து, நேற்று மாலை ஜனாதிபதி அநுர தலைமையிலான இலங்கைத் தூதுக்குழுவுக்கும், இந்தியப் பிரதமர் மோடி தலைமையிலான இந்தியத் தூதுக் குழுவுக்கும் இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே, தமிழர்களின் விருப்பங்களை நிறைவேற்றுவதற்கு ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம் அக்கறையுடன் செயற்படும் என்ற நம்பிக்கை தனக்கு இருப்பதாக பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இந்தியாவும் இலங்கையும் தங்கள் கூட்டாண்மையை விரிவுபடுத்துவதற்கான எதிர்கால நோக்கத்தை ஏற்றுக்கொண்டன. விரைவில் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தத்தை முடிக்க முடிவு செய்துள்ளன. மின்சார இணைப்பு மற்றும் பெற்றோலிய குழாய்களை நிறுவுவதன் மூலம் ஆற்றல் உறவுகளை அதிகரிக்க முடிவு செய்துள்ளன.

பரந்த அளவிலான பேச்சுவார்த்தையில் இந்த முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்தியா - இலங்கை பொருளாதார கூட்டாண்மையை வலுப்படுத்த இரு தரப்பும் முடிவு செய்துள்ளன. டிஜிற்றல் மற்றும் எரிசக்தி இணைப்பு ஆகியவை ஒத்துழைப்பின் முக்கியமான தூண்களாக இருக்கும். மின்சார இணைப்பு மற்றும் பெற்றோலியக் குழாய்களை நிறுவுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும். இலங்கையின் மின் உற்பத்தி நிலையங்களுக்கு திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயுவை இந்தியா வழங்கும். எங்கள் பாதுகாப்பு நலன்கள் ஒன்றோடொன்று இணைந்திருப்பதை நாங்கள் இருவரும் ஒப்புக்கொள்கிறோம்.

இலங்கையில் உள்ள தமிழ்ச் சமூகத்தின் விருப்பங்களை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றும் என்று இந்தியா நம்புகிறது. அத்துடன் இலங்கை அரசமைப்பினை முழுமையாக அமுல்படுத்தவும் மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவதற்குமான தமது உறுதிமொழியினை அவர்கள் நிறைவேற்றவேண்டும். இந்தியா இதுவரை இலங்கைக்கு 5 பில்லியன் டொலர் கடன் மற்றும் மானிய உதவிகளை வழங்கியுள்ளது. இலங்கையின் 25 மாவட்டங்களிலும் இந்திய உதவித்திட்டங்கள் உள்ளன. இந்தியாவின் திட்டங்களின் தேர்வு எப்போதும் அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை என்பதை அடிப்படையாகக் கொண்டவை" -என்றார். (அ-ம-இ)

## இழுவைமடிப்...

ஈடுபடுகின்றன. இதனால், இந்தத் தொழில் (மீன்பிடி) அழிவடையும் ஆபத்து காணப்படுகின்றது என்று இந்தியப் பிரதமர் மோடியிடம் ஜனாதிபதி அநுர தெரிவித்துள்ளார்.

இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி தொடர்பில் இரு தலைவர்களும் நேற்று நீண்ட நேரம் விவாதித்துள்ளனர். இதன்போது, ஜனாதிபதி அநுர இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார். இதையடுத்து, இரு நாடுகளுக்கும் தொல்லையாக மாறியுள்ள மீனவர் பிரச்சினைக்கு நீடித்த மற்றும் நிலையான தீர்வைக் காண்பதற்கு இரு தலைவர்களும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

பேச்சுவார்த்தை மற்றும் ஆக்கபூர்வமான செயற்பாடுகள் மூலம் நீண்டகால மற்றும் பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வை எட்ட முடியும் என்ற நம்பிக்கையில், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே உள்ள சிறப்பான உறவைக் கருத்தில் கொண்டு, இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் தொடர்ந்து ஈடுபடுமாறு தத்தமது அதிகாரிகளுக்கு அவர்கள் உடனடியாக அறிவுறுத்தியுள்ளனர். (அ-ம-26)

## இலங்கையை...

இந்தியாவுக்கு எதிராக இலங்கையை எந்தவொரு தரப்பும் பயன்படுத்தமுடியாது. இந்திய நலன்களையும், பிராந்திய நலன்களையும் குறித்த தெளிவான பார்வை எனக்கு உள்ளது என்று ஜனாதிபதி அநுர தெரிவித்துள்ளார்.

பிரதமர் மோடியுடனான நேற்றைய சந்திப்பின்போதே ஜனாதிபதி அநுர இவ்வாறு தெரிவித்துள்ளார். அத்துடன், இலங்கைக்கு வருமாறும் பிரதமர் மோடிக்கு அநுர அழைப்பு விடுத்துள்ளார். ஜனாதிபதி அநுரவின் அழைப்புக்கு நன்றி தெரிவித்த பிரதமர் மோடி, அது தொடர்பில் சாதகமாகப் பரிசீலிப்பேன் என்றும் அநுரவிடம் கூறியுள்ளார்.

பிராந்திய உறுதிப்பாடு எனும்போது, கடல்சார் பாதுகாப்பு, இணையப் பாதுகாப்பு மற்றும் பயங்கரவாத ஒழிப்பு ஆகிய விடயங்களில் ஒன்றுபட்டுச் செயற்படுவது தொடர்பிலும் இரு தலைவர்களும் உடன்பட்டுக் கொண்டனர். (அ-ம-இ)

## புதிய...

பட்டுள்ளது. கல்வித் தகைமை தொடர்பில் எழுந்த சர்ச்சைகளைத் தொடர்ந்து, சபாநாயகராகச் செயற்பட்ட அசோக ரன்வல பதவி விலகியதைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே இன்று சபாநாயகர் தெரிவு இடம்பெறவுள்ளது.

இன்று ஐக்கிய மக்கள் சக்தியும் சபாநாயகராக ஒருவரின் பெயரை முன்மொழியவுள்ளதாகத் தெரிவித்துள்ள நிலையில், அவ்வாறு முன்மொழியப்படும் பட்சத்தில் அதற்கு ஆதரவு வழங்கப்படும் என்று பெரமுன அறிவித்துள்ளது.

எதிர்க்கட்சிகளால் நியமிக்கப்படும் சபாநாயகர் வெற்றிபெறமாட்டார் என்பது தெளிவாகத் தெரிந்தபோதிலும், மக்களை ஏமாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் அசோக ரன்வலவின் செயற்பாட்டுக்கு எதிர்ப்பை வெளியிடும் வகையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சிகள் கூறியுள்ளன.

இதேவேளை - 2025ஆம் ஆண்டுக்கான முதலாவது நாடாளுமன்றக் கூட்டத்தொடர் ஜனவரி மாதம் 7ஆம் திகதி ஆரம்பமாகும் என்று சபை முதல்வரும், அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார். பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலி தலைமையில் நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகளுக்கு அமையவே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. (அ-ம-44)

## பொருளாதாரப்...

இடத்தைப் பெறுகிறது என்பதை நான் அறிவேன் என்று ஜனாதிபதி அநுர குமார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இலங்கையின் ஜனாதிபதியான பின்னர் இது எனது முதலாவது வெளிநாட்டுப் பயணம். டெல்லிக்கு வரமுடிந்ததில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். எனக்கு வழங்கப்பட்ட அழைப்புக்காவும், நான் உட்பட ஒட்டுமொத்த தூதுக் குழுவுக்கும் வழங்கப்பட்ட அன்பான விருந்தோம்பலுக்காகவும் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பு மேலும் மேம்பட வேண்டும்.

பொதுச்சேவைகளை டிஜிற்றல் மயமாக்குவதில் இந்தியா மகத்தான வெற்றியைப் பெற்றுள்ளது. எனவே, இலங்கையும் அதேபாதையில் செல்கிறது. இந்த விடயத்தில் ஆதரவளிப்பதாக பிரதமர் மோடி எனக்கு உறுதியளித்துள்ளார். சமூகப் பாதுகாப்பு மற்றும் நீடித்த வளர்ச்சி ஆகியவை எமது மக்கள் எங்கள் இரு தரப்பையும் அதிகாரத்திற்குத் தேர்ந்தெடுத்ததற்கான அடிப்படைக் காரணங்கள். சமீபத்தில் முடிவடைந்த அதிபர் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலில் பெற்றது போன்ற ஒரு வரலாற்று வெற்றியை இதற்கு முன்னர் நாங்கள் பெற்றதில்லை. இலங்கை மக்களால் வெளிப்படுத்தப்பட்ட செய்தி, இலங்கையில் ஒரு புதிய கலாசாரம் உருவாக வழிவகுத்தது. நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள மக்கள், அனைத்துச் சமூகங்களையும், சமயங்களையும் சேர்ந்தவர்கள் எங்கள் மீது நம்பிக்கை வைத்துள்ளனர்" - என்றார். (அ-ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாட்டு பெருவிழாவும், கண்காட்சியும்

கொடிகாமம், டிசெ. 17

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகு நடத்தும் மாகாண பண்பாட்டுப் பெருவிழாவும், கண்காட்சியும் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக்டிறஞ்சன் தலைமையில் மன்னார் நகரசபை மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனும், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், மன்னார் மாவட்ட செயலாளர் க.கனகேஸ்வரன் ஆகியோரும், விருந்தினராக நானாட்டான் நாட்டுக் கூத்து கலைஞர் செ.மாசிலாமணியும் கலந்துகொள்ளவுள்ளனர். (ரி-159)


## வேலைவாய்ப்பு

பிரபல நிதி நிறுவனத்தில் வேலைவாய்ப்பு அலுவலக உத்தியோகத்தர் (Office Work)

தகமை - G.C.E A/L Pass English 'C' Pass - in A/L

வயது - 18 - 24, சுயவிபரக் கோவையை Whats app ற்கு அனுப்பி வைக்கவும்

TEL : 075 041 4026

(CS/56945) J-1

## தவறவிடப்பட்டுள்ளது

Transcend Pen Drive (இளம் நீலம்)

யாழ்ப்பாண கொமர்ஷல் வங்கிற்கும் தொழில் திணைக்களத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் Transcend Pen Drive தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

077 302 4234

(CS/56944) J-1

## பணியாளர்கள் தேவை

A/L படித்த ஆங்கில கணணி அறிவுடைய அலுவலக பணியாளர்கள் உடனடி தேவை. சுய விபர கோவையை மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கவும்

321, K.K.S Road
Jaffna

திருமுருகன் கொம் நெற்
tcnet2b@gmail.com

## காணி விற்பனைக்கு


- வசாவிளானில் 67 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தோட்டம் செய்ய பண்ணை அமைக்க சிறந்த காணி.
- அரியாலையில் 48 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (குறைந்த விலையில் பண்ணை அமைக்க சோலர் திட்டத்திற்கு உகந்த காணி)
- இராசவீதி நிலாவரை கிணற்றுக்கு 500m தூரத்தில் 9 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (தோட்டம் செய்ய, வீடு கட்ட உகந்த காணி. 2 1/2 பரப்பாக பிரித்தும் கொடுக்கப்படும். பரப்பு - 14, 000, 00/-
- தரகர் தேவையில்லை உரிமையாளருடன் நேரடித் தொடர்புக்கு.

077 262 7581, 077 387 0140

(CS/56946) J-1


## இறப்பு அறிவித்தல்

"எங்கள் கன்மலையொன்று காற்றானது"



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 02 . 08 . 1954 | 16 . 12 . 2024 |

கலாநிதி

### சதாசிவம் மகேஸ்வரன்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், 71, The Chine Grange Park, N21 2EE, London ஐ வதிவிடமாகவும் கொண்ட கலாநிதி சதாசிவம் மகேஸ்வரன் இலண்டனில் இயற்கை எய்தினார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுகொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்

(CS/2059) J-1

077 306 0907, 076 692 6558

## மரண அறிவித்தல்

### அபிராமிப்பிள்ளை கேதீஸ்வரதாசன்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15.12.1943 | 16.12.2024 |

காரைநகர் மாப்பாணவூரியைப் பிறப்பிடமாகவும் வவுனியா, முந்தல் மாப்பாணவூரியை வசிப்பிடமாகவும் கொண்ட அபிராமிப்பிள்ளை கேதீஸ்வரதாசன் நேற்று (16.12.2024) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை (தபாலதிபர் - மலேசியா), சுந்தரம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான விஜயதர்மா (பிரதம லிகிதர்) - சொர்ணம்மா (ஆசிரியை பால பண்டிதை) தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கேதீஸ்வரதாசன் (முன்னாள் தவிசாளர் காரைநகர் பிரதேச சபை - ஓய்வு பெற்ற தபாலதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், பிரபா (Group Finace Equitabe Life of - கனடா), Dr. கிருபா (கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை), செந்தூர்க்குமரன் (பொறியியலாளர் - USA), Dr. செந்தூர்வாசன் (DGH Horana) ஆகியோரின் பாசமிகு தாயாரும், Dr. ரவிச்சந்திரன் (கனடா), Dr.டிலினி காஞ்சனா (USA), Dr. நிரானி பிரியதர்சினி (BH Panadura) ஆகியோரின் அன்பு மாமியாரும், சுவேதன் (கனடா), ஹரினி, புவனி (USA), நத்தாஷா, பிரார்த்தனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான தெய்வநாயகி, சபாபதிப்பிள்ளை, நளாயினிதேவி, கந்தையாபிள்ளை, சாம்பவமூர்த்தி, தனலஷ்மி, நித்தியலஷ்மி ஆகியோரின் அருமைச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கிருஸ்ணசாமி, பராசக்தி, சரஸ்வதி, நல்லலிங்கம், சுப்பிரமணியம், ராஜேஸ்வரி, சிவமலர், குமரேஸ்வரதாசன், Dr.சுவர்ணலலிதா ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற கலாதேவி மற்றும் Dr. Mark Handalage ஆகியோரின் அன்புச் சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
குடும்பத்தினர்.

செந்தூர் வாசம்
மாப்பாணவூரி காரைநகர்,
யாழ்ப்பாணம்.

செந்தூர் (மகன்) +1512 7017 889
பிரபா (மகள்) +1226 9885 930
வாசன் (மகன்) +94 7729 14842

(CS/569<2) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111   செய்தி : news@uthayan.com   விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.12. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.